செய்தி வெளியீடு எண் : 2331 நாள் : 23.11.2023

# செய்தி வெளியீடு

திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டத்தைச் சார்ந்த 18 அமராவதி பழைய வாய்க்கால்களின் (இராமகுளம் முதல் கரூர் வலது கரை வரை) பாசனப் பகுதிகளில் திருப்பூர் மாவட்டத்தில் 15936 ஏக்கர் மற்றும் கரூர் மாவட்டத்தில் 13451 ஏக்கர் ஆக மொத்தம் 29,387 ஏக்கர் நிலங்களுக்கு
25 நாட்கள் தண்ணீர் திறப்பு, 12 நாட்கள் தண்ணீர் அடைப்பு என்ற அடிப்படையில் அமராவதி ஆற்று மதகு வழியாக 2376.00 மி.க.அடிக்கு மிகாமலும், திருப்பூர் மாவட்டத்திலுள்ள 25,250 ஏக்கர் புதிய பாசன நிலங்களுக்கு 21 நாட்கள் தண்ணீர் திறப்பு, 16 நாட்கள் தண்ணீர் அடைப்பு என்ற அடிப்படையில் அமராவதி பிரதானக் கால்வாய் வழியாக வினாடிக்கு 440 கனஅடி வீதம் 798.34 மி.க.அடிக்கு மிகாமலும் ஆக மொத்தம் 54637 ஏக்கர் நிலங்களுக்கு நிலையிலுள்ள பயிர்களைக் காப்பாற்றும் பொருட்டு பாசனத்திற்காக 24.11.2023 முதல் 31.12.2023 வரை 37 நாட்களுக்கு 3174.34 மி.க அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்து விட அனுமதி அளித்து அரசு ஆணையிட்டுள்ளது.

இதனால், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களிலுள்ள 54,637 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,**
**நீர்வளத்துறை.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in